ekananda Series.—No. 1

# மது பூமியே புண்ணிய பூமி

விவேகாநந்த சுவாமி

எழுதியதிலிருந்து

R. நாராயணஸ்வாமி அய்யர்

மொழிபெயர்த்தது

விவேகாநந்த ஸ்வாமி படத்துடன் கூடியது


விவேகாநந்தாலயம்

11, மேட்டு தெரு

சென்னை

1919 [6 பை



R6.
N14
149239

2486

PRINTED BY P. R. RAMA IYAR AND CO., MADRAS



"கௌரவம் பொருந்திய நோக்கங்களை ஏழைகளிடமும் எளியவர்களிடமும் சேரும்படி செய்து, பிறகு அவர்களே யோசித்து முடிவுசெய்யும்படி விட்டுவிடவேண்டும் என்பதே எனது எண்ணம்."

விவேகாநந்த ஸ்வாமி.

# நமது பூமியே புண்ணிய பூமி.

[விவேகாநந்தஸ்வாமிகள் எழுதியதின் மொழிபெயர்ப்பு]

ஆகா! எவ்வித பூமியிது! இந்தப் புண்ணியபூமியில் நிற்கும் எவனும், சுதேசவாஸியானாலும் சரியே அந்நியனாயினும் சரியே, தன் ஜீவன் மிருகப்பிராயமா யிருந்தாலன்றி, பூமியிலேயே மகா பரிசுத்தகுணம் நிறைந்த சத்புருஷர்களின் மேலான எண்ணங்கள் தன்னைச் சூழ்ந்திருக்கிறதென்று உணர்ந்தேதீருவான். அவ்வித எண்ணங்கள் சரித்திரத்திற்கு அகப்படாத அவ்வளவு அநாதிகாலமுதற்கொண்டு மிருகத்தன்மையிலிருக்கும் (பிராணிகளை) தெய்வத்தன்மைக்குச் சமமாக எழுப்பவே பிரயத்தனம் செய்துவருகின்றன. இங்கிருக்கும் வாயுமண்டலமே ஆத்மதத்துவ இயக்கத்துடன் கூடியிருக்கிறது. (உண்மையறிவைக் கொடுக்ககூடிய) தத்துவ சாஸ்திரத்திற்கும் சன்மார்க்க கொள்கைகளுக்கும் ஆத்மஞானத்திற்கும் பெயர் பெற்ற புண்ணியபூமியிது. மிருகத்தன்மையைக் காப்பாற்றுவதற்காக இடைவிடாமல் போராடிக்கொண்டிருக்கும் மனிதனுடைய களைப்பை ஆற்றவல்ல சாதனங்களுக்குப் பெயர்போனது. மனிதனானவன் மிருகத்தன்மை என்ற போர்வையைக் கழற்றி யெறிந்துவிட்டு நித்தியமாய்ப் பிறப்பிறப்பற்று ஆநந்தமயமாய் விளங்கும் ஆத்மசொரூபத்துடன் விளங்குவதற்குத் தேவையான பழக்கங்களுக்கெல்லாம் பெயர்போன பூமியிது. சுகங்கள் பூர்த்தியாகவும் அதைக்காட்டிலும் அதிகமான துக்கங்கள் நிறைந்தும் இருந்த இந்தப் பூமியில்—இங்கே தான் முதல் முதல் மனிதனானவன் இவைகளெல்லாம் வீண் எனக்கண்டு கொண்டான். யௌவன தசையிலேயே, டாம்பீகத்தின்

மடியிலேயே, பெருமையின் உன்னத தசையிலேயே, அதிகாரம் நிறைந்திருக்கும்போதே மாயாபந்தங்களினின்றும் மனிதன் அவற்றை உதறி யெறிந்துவிட்டு வெளிக்கிளம்பியது முதல் முதலில் இந்தப் பூமியில்தான்; மனிதவர்க்கமாகிற மகா சமுத்திரத்தில் இங்கேதான் சந்தோஷம் வருத்தமென்றும் பலம் பலஹீனமென்றும் தனம் தரித்திரமென்றும் சுகதுக்கமென்றும் புன்னகை கண்ணீரென்றும் வாழ்க்கை மரணமென்றும் கூறப்பட்ட பலமான் சுழல்களின் கொடிய போராட்டங்களுக் கிடையில் நித்யமான அமைதியுடன் கூடிய சாந்த நிலையாகிய உருக்கமான (ஆநந்தமய) உணர்ச்சியின் பேரில் துறவு நிலையென்ற ஆஸனம் எழும்பியிருக்கிறது. இந்த பூமியில் இங்கேதான் வாழ்க்கை மரணங்களைப்பற்றிய பெரிய கேள்விகளும் வாழ்க்கையினிடம் ஏற்படும் பற்றுதலும் அதைக் காப்பாற்றுவதற்காக மனிதன் அடைகின்ற வீணான வெறிகொண்ட பிரயத்தனங்களெல்லாம் துக்கங்களையே நிரப்புகின்றன என்ற தன்மையும் முதன் முதலில் ஆராய்ச்சி செய்யப்பட்டு ஒரு முடிவுக்கும் கொண்டுவரப்பட் டிருக்கின்றன. முன்னம் ஒருகாலத்திலும் பூர்த்தி செய்யப்படாதவண்ணமும் இனி ஒருக்காலும் மேலான பூர்த்திக்கு வரமுடியாதென்று சொல்லக்கூடிய வண்ணமும் முடிவு செய்யப்பட்டிருக்கின்றன. எப்படியெனில் இந்தப்பூமியில் மாத்திரம்தான், இவ்விடத்தில்மட்டும், வாழ்க்கையே துக்கமயமென்றும் ஒரே உண்மையாக இருக்கப்பட்ட ஏதோ ஒரு வஸ்துவின் சாயைமாத்திரமே யென்றும் கண்டு பிடிக்கப்பட்டது. மதமானது உண்மையாகவும் அனுபவ பூர்வமாகவும் இருக்கப்பட்ட ஒரே இடம் இந்தப் பூமிதான். வேறு பூமிகளில் ஜனங்கள் தமது எளிய சகோதரர்களைக் கொள்ளையடித்தாயினும் வாழ்க்கை யின்பங்களை

அனுபவிக்க எப்படி வெறிகொண்டு ஆழ்ந்துவிடுகிறார்களோ அவ்விதம் மனிதர்களும் ஸ்திரீகளும் தைரியமாகவே (ஆத்மசம்பந்தமான மதமாகிற) லட்சியத்தை அனுபவித்தற்கு முழுகிவிடுவது இந்தப் (பாத) பூமியில் மட்டிலும் தான். இந்த பூமியில், இங்கேமாத்திரமே மனிதனது ஹிருதயம் பட்சி மிருகங்கள்முதல் செடி வர்க்கங்கள் வரையில் சகல ஜீவராசிகளுக்கும் இடந்தந்து விசாலமடைந்திருக்கிறது. உன்னதமான தேவர்கள் முதல் மணற்பருக்கைகள் வரையில் உன்னதமானவைகளும் மிகத் தாழ்ந்தவைகளும் கூட எல்லையில்லாமல் விரிவடைந்து விளங்கும் மனித ஹிருதயத்தினிடம் இடங் கண்டுகொண்டன. ஜகத்முழுமையும் ஒரே தொடர்ச்சிபெற்ற ஒற்றுமை பெற்று விளங்க அதன் ஒவ்வொரு நாடியும் தன் நாடியென மனிதனது ஆத்மா அறிவடைந்து தெரிந்துகொண்டது இந்த பூமியிலே மாத்திரம்தான்.

இந்தியாவின் இழிந்த நிலைமையைப்பற்றி நாமெல்லோரும் ரொம்பவும் கேள்விப்படுகிறோம். நானுங்கூட அதை (இந்தியா இழிந்ததென்று) நம்பியிருந்த காலம் உண்டு. ஆனால் இப்போது அனுபவம் என்ற நிச்சய பூமியில் நின்றுகொண்டு, பூர்வம் நினைத்திருந்த தப்பபிப்பிராயங்களெல்லாம் நீங்கப்பெற்று இதர தேசங்களைப் பற்றி (தவறாக) நினைத்திருந்த உயர்வான தோற்றங்களெல்லாம் நேரில் சம்பந்தப்பட்டதன் பலனாக அவற்றின் உண்மையான சாயையும் பிரகாசமும் விளங்கிவிடவே, மிகுந்த வணக்கத்துடன் நான் நினைத்தது தவறு என்று ஒப்புக்கொள்கிறேன். சிரேஷ்டமான ஏ! ஆரியவர்த்தமே! நீ ஒருபோதும் இழிவான நிலையிலிருந்ததே யில்லை. செங்கோல்கள் ஒடிபட்டும் எறியப்பட்டும் போயிருக்கின்றன. அதிகாரம் என்ற பந்து கைக்குக்கை உருண்டுகொண்டு

வந்திருக்கிறது ; ஆனல் இந்தியாவில் அரச சபைகளைப் பற்றியும் அரசர்களைப்பற்றியும் வெகு சிலரே கவலைப் படுகிறவர்கள். ஜனங்களில் ஏராளமானவர்கள், மிக்க உயர்ந்தவர்கள் முதல் மிகத் தாழ்ந்தவர்கள் வரையில் தம் முடைய தீராத மார்க்கத்தைப் பின்பற்றுகிறவர்களே யாவார்கள். (இந்திய) ஜாதீயவாழ்க்கையின் ஓட்டமானது சிலகாலங்களில் மெதுவாகவும் பாதி பிரக்ஞையோடும் மற்றும் சிலகாலங்களில் பலமாகவும் நன்ருக விழித்துக் கொண்டும் சென்றுகொண்டிருக்கிறது. பல பல நூற் ருண்டுகளாக பிரகாசத்தோடும் இடைவிடாமல் இங்கு மங்கும் சிறிது மங்கலான பாகம் தென்பட்டாலும் அடுத் தாற்போல் இதன் பிரகாசத்தையும் சேர்த்துக்கொண்டு அதிக பளபளப்போடும் விளங்கிக் கொண்டிருக்கும் சங்கிலித்தொடரின் முன் பயபக்தியோடும் நான் நின்று பார்த்துக் கொண்டிருக்கிறேன். (இவ்வித பெருமை யோடும்) என்னுடைய பாரதமாதாவானவள் தன்னுடைய மேலான கௌரவம் பொருந்திய (காரியத்தை) விதியைச் செலுத்துவதான நோக்கத்தோடும் தனக்கே உரியதான ஒருவித கம்பீர கதியோடும் நடந்துகொண்டிருக்கிருள். அந்த விதியைத் தடுப்பதற்கு—மிருகப்பிராயமா யிருக்கும் மனிதனை தெய்வத்திற்குச் சமமாகச் செய்வதாகிய அவ் விதியைத் தடுப்பதற்கு—இந்த பூமியிலாவது மேலுலகத்தி லாவது யாதொரு சக்தியும்கிடையாது. ஆமாம், எவ்வளவு பெருமையான விதி பாருங்கள். சகோதரர்களே! உப நிஷத்துகள் ஏற்பட்ட அவ்வளவு பழைய கால முதற் கொண்டே நாம் உலகத்தாருக்கு முன் வீரவாதம் பேசி அழைக்கிறோம்.

ந தநேந, ந பிரஜயா, தியாகேனை கேந அமிருதத்வ மானசூ :

"தனத்தால் முடியாது. பிரஜாவிர்த்தியால் முடியாது. தியாகத்தால் மாத்திரமே அழியாத்தன்மை அடையப் படும்" என்று முடிவு கூறிவிட்டோம். [மற்ற சமூகத்தார் இந்தக் கொள்கையை ஆட்சேபிக்கப்பார்த்தும் முடியவில்லை.] பற்றின்மை அல்லது தியாகம் என்பதே நமது முடிவான நோக்கம். அதன்படியே நின்றுவருகிறோம். இனிமேலும் காலமுள்ளளவும் நிற்பதாகவும் தீர்மானித்துவிட்டோம். இதுவே இந்திய வாழ்க்கையின் கதை, நித்யமான கானங்களின் சாரங்களுமிதுவே. இந்தியாவின் இருப்பிற்கே அஸ்திவாரம், முதுகெலும்பு போன்றது. மனிதவர்க்கத்தையே ஆத்மதத்துவ மறியும்படி செய்வது தன் வாழ்க்கைப் பயனாக இருக்கும் இவ்விஷயத்தில் பாரத மாதா ஒருபோதும் பின்வாங்கினதே யில்லை. ஆளுகின்றவர் தார்த்தாரியராயினும் சரி, துருக்கியராயினும் சரி, மொகலாயராயினும் சரியே, ஆங்கிலேயராயினும் சரியே.

உலகத்தையே அசைக்கவல்ல ஆத்மதத்துவ மேதாவிகள் இல்லாத காலம் இந்தியாவில் எப்போதாவது உண்டென்று எவரேனும் துணிந்து கூறுவார்களா? [முடியாதென்றபடி] ஆனால் இத்தேசத்து வேலை ஆத்மசம்பந்தமுள்ளது; இது சைனியங்களைச் செலுத்தியும் யுத்த முழக்கங்களைச்செய்தும் பரப்பக்கூடிய வேலையல்ல. மிருதுவான பனித்துளிகள், கண்களுக்குத் தெரியாமலும் காதுக் கெட்டாமலுமிருந்தும், எப்படி அழகான புஷ்பங்களால் பூமியை அலங்கரிக்கின்றனவோ அப்படியே இதன் செல்வாக்கு நடைபெறுகின்றது. நமது தேசத்திற்குள் வேலை செய்ய ஒருபோதும் சளைக்கவில்லையானாலும் வெளித் தேசங்களுக்குப் போவதற்கு சந்தர்ப்பங்கள் தெய்வாதீனமாகக் கூடவேண்டும். ராஜ்யங்களை ஒன்றுசேர்க்கவல்ல

144239

தார்த்தாரியர் (முதலிய பலரும்) எப்போதெப்போதெல்லாம் இந்த பூமியை வெளியுலகத்தோடு ஒன்று சேர்த்தார்களோ அப்போதப்போதெல்லாம் இங்கிருந்து ஆத்ம தத்துவ செல்வாக்கு பெருகி ஓடியிருக்கிறது என்பது கற்றவர்க்கெல்லாம் தெரியக்கூடியதே யாகும். அதே மாதிரி இப்போதும் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. * * * அதேவேலை ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டது. என்வார்த்தைகளைக் கவனியுங்கள். இது ஆரம்பமாத்திரமேயாகும். பெரிய காரியங்கள் இனிக் கைகூடவேண்டியிருக்கிறது. * * * நாகரிக மிகுந்த நாடுகளில் எல்லாம் லட்சக்கணக்கான ஜனங்கள்—நான் தாராளமாய்க் கூறுவேன்—லட்சக்கணக்கான ஜனங்கள்—தங்களுடைய சமூக நோக்கங்களைப் பூர்த்திசெய்ய, பரிசுத்தமாக்க, வேதாந்தத்தின் உயர்ந்த நிலைமையே வேண்டுமென்று கண்டுகொண்டு விட்டார்கள். தற்காலத்திய பணவாசையால் பாதாளத்தில் தள்ளப்பட்டிருக்கும் நிலைமையிலிருந்து இதுவே கதியென்று உணர்ந்துவிட்டார்கள். * * *

நாட்டிற்குள் செய்யவேண்டிய வேலை இருவகைப்படும். ஆத்மதத்வம் பரவச்செய்வதுடன் கூட தேச சமூகத்தில் கலந்திருக்கும் பல தனி சமூகங்களையும் ஜீரணித்துக்கொள்ளுதல். பலவகைப்பட்ட சமூகங்களையும் சேர்த்து ஒன்றாகும்படி செய்வதே ஒவ்வொரு தேச வாழ்க்கைக்கும் சுபாவமா யேற்பட்ட காரியமாகும். [இந்தக் காரியத்தைப்பற்றி ஸ்வாமிகள் தெளிவாக ஒரே இடத்தில் சேர்த்துக் கூறவில்லை. ஆனாலும் பல விடங்களில் காணப்படும் வாக்குகளிலிருந்து ஸ்வாமிகளின் கருத்து எவ்வித மிருக்கிறதென்று அறிந்து முடிந்த வரையில் அந்தக்கருத்தை நிறைவேறும்படி செய்வதுகூட நம் விவேகாநந்தாலயத்தின் நோக்கங்களில் ஒன்றாகும்.]